# சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)
# திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்
# MCOP . No.77/2025

**நாள் : 02.12.2025**

**ம.சா.** 1 திரு.மாதேஷ்வரன், த/பெ.பரமசிவம்

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

இறந்துபோன பரமசிவம் எனது அப்பா ஆவார். எனது சொந்த ஊர் சி.கே. ஆசிரமம் அருகில் உள்ள காந்திபுரம் ஆகும். 26.11.2005ஆம் தேதி காலை 7.30 மணியளவில் நானும், எனது அப்பாவும் புதுப்பேட்டையிலிருந்து திருப்பத்தூர் நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தபோது விபத்து நடந்தது. எனது அப்பா முன்னால் சென்றார், அவரை தொடர்ந்து நான் பின்னால் நடந்து போனேன். எங்களுக்கு பின்னால் புதுப்பேட்டையிலிருந்து திருப்பத்தூர் நோக்கி வந்த இருசக்கர வாகனம் ஹாரன் அடிக்காமலும், வேகமாக வந்து என் அப்பா மீது மோதிவிட்டது. இருசக்கர வாகனத்தின் பதிவு எண் TN 23 R 4212 Hero honda splendor ஆகும். நான் சம்பவ சமயத்தில் எனது அப்பாவை பின் தொடர்ந்து நடந்து செல்லவில்லை என்றால் சரியல்ல, அவ்வாறு நான் நடந்து சென்றிருந்தால் என்மீதுதான் முதலில் இருசக்கர வாகனம் மோதியிருக்கும் என்றால் சரியல்ல. சம்பவ கால கட்டமானது பனிக்காலம் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது பனிக்காலமாக இருந்ததால் எனது அப்பா போர்வையை போர்த்திக்கொண்டு நடந்து சென்றார் என்றால் சரியல்ல. அவ்வாறு போர்வையை போர்த்திக்கொண்டு சாலையை சரிவர கவனிக்காமல் திடீரென சைாலையை குறுக்கே கடந்து சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா மண்ரோட்டில் இடது ஓரமாகத்தான் நடந்து சென்றார், குறுக்காக ரோட்டை கடக்கவில்லை. எனது அப்பா விபத்து சமயத்தில் சென்னையில் உள்ள ஐயன் டேன்னரியில் சூப்பர்வைசராக பணிபுரிந்து மாதம் ஒன்றுக்கு ரூ.6750/– சம்பாதித்து வந்தார். எனது அப்பா டேன்னரியில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 ஆவணமானது வழக்கிற்காகவேண்டி தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இதுசம்பந்தமாக 2ஆம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனமானது சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு சம்பளம் தொடர்பாக 20.03.2006ல் கடிதம் அனுப்பியதில் அந்த மாதிரியான நிறுவனமே இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

விபத்தானது 26.11.2005ல் நடந்தது என்றால் சரிதான். ம.சா.ஆ.6 சம்பள பட்டியலானது 12.06.2005 தேதியிட்டது என்றால் சரிதான். விபத்திற்கு 6 மாதத்திற்கு முந்தைய சம்பள பட்டியல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு 6 மாதத்திற்கு முன்பே மேற்படி ஆவணம் பெறப்பட்டுவிட்டதா என்றால் ஆமாம்.

(இந்த வழக்கில் 18.04.2009ஆம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு முழுவிசாரணைக்கு பின்னிட்டு வழக்கு முடிவுற்ற நிலையில் 1ஆம் எதிர்மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு செய்துக்கொண்டதற்கிணங்க CRP 4367/2013 நாள்.22.09.2021 தேதியிட்ட உத்தரவின்படி 1ஆம் எதிர்மனுதாரருக்கு போதிய வாய்ப்பளித்ததற்கு பின்னிட்டு தகுதியின்பால் வழக்கினை தீர்வு செய்ய இந்நீதிமன்றத்திற்கு ஏவுரைக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை முன்னிலைப்படுத்திய நிலையில் ம.சா.1ன் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.